[1974 மார்ச் 6

*300 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டித் துணை வட்டத்தில் முக்கரம் பாக்கம், குருவியகரம் ஆகிய அரிசனக் காலனிகளில் மேல்நிலைக் குடிநீர்த் திட்டம் அமைவதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை?

(இ) இவை எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) கும்முடிப்பூண்டித் துணை வட்டத்திலுள்ள முக்கரம்பாக்கம் கிராம அரிசன காலனிக்கு மட்டுமல்லாமல், அந்த கிராமப் பகுதி யினர் அனைவரும் பயன் பெறும் வகையில் ரூ. 44,000 மதிப்பீட்டுச் செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தை தமிழ் நாடு குடிநீர் வசதி வாரியம் நிறைவேற்றியுள்ளது. கும்முடிப் பூண்டித் துணை வட்டத்திலுள்ள குருவியகரம் அரிசனக் காலனிக்கு மேல் நிலைக் குடிநீர்த் திட்டம் ஏதும் பரிசிலனையில் இல்லை. ஆனல் அங்கு ஒரு குடிநீர் கிணறு ரூ. 4,000 மதிப்பீட்டுச் செலவில் அமைக்க செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் 4—2—1973 அன்று அனுமதி அளித்துள்ளார். கிணறு தோண்டும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. விரைவில் முடிவடையும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்த மாதிரி திட்டங்கள் துவங்கப்பட்டு ஓராண்டுக்கு மேலாகியும் முடிவடை யாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, தொடங்கப்படுகிற திட்டங்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிவடைய வேண்டு மென்று அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்த முக்கரம் பாக்கம் கிராமத்தில் ரூ. 10,000 செலவிலே சாதாரண மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுவது என்று நலத்துறை மூலமாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டு செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்பாடு செய்தார். ஆனல், ஒப்பந்தக்காரர் முடிக்கவில்லை. அவருக்கும் கிராமத்திலிருக்கிற அரிசன மக்களுக்கும் தகராறு ஏற்பட்டது. அதனல் அவர், முடிக்காமல் தகராறு செய்தார். அதற்குப் பிறகுதான் தமிழக அரசு குடிநீர் வாரியத்தின் மூலம்

1974 மார்ச் 6]

ரூ. 48,000 செலவில் அந்த வட்டாரத்தில் இருக்கிற வேறு சில கிராமங்களையும் இணைத்து செயலாற்றுகிறது, இந்த முக்காரம் பாக்கம் காலனியும் அதிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்தத் திட்டம் விரைவிலே நிறைவேற்றப்படும்.

Flood banks in Tiruttani taluk.

* *Q.*—301 THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal under the consideration of the Government to raise flood banks at Nallathur village, Adikilpattu village and Nehru Nagar in Tiruttani taluk?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : குசஸ்தலை ஆற்றின் கரையோரங்களில் வெள்ளத் தடுப்புச்சுவர் கட்டும் குறிப்பு, தலைமைப் பொறியாளரால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, மழைக் காலத்தில் குசஸ்தலை ஆற்றிலே வெள்ளம் வருகிற நேரத்தில், அந்தப் பகுதியிலே கரையை உடைத்துக் கொண்டு ஊருக்குள்ளே போகிறது. அதனால், பயிர்ச் சேதம், உயிர்ச் சேதம் ஏற்படுகிறது. ஆகவே, அதற்கான மதிப்பீடுகளைத் தயாரித்து தலைமைப் பொறியாளர் பரிந்துரை செய்து ரெவின்யூ போர்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். அதற்கு அரசுதான் நிதி ஒதுக்க வேண்டும், எனவே அதற்கான நிதியை அரசு ஒதுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ரெவின்யூ போர்டிலிருந்து அரசுக்கு வந்த பிறகு, அரசு பரிசீலித்து, இருக்கிற நிதி வசதிக்குள் நிதி அளிக்கும்.

Doddahalla River Project

* 302 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH :
THIRU P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the State Government have recommended to the Central Government for sanctioning the Doddahalla River Project in Denkanikottah taluk; and

(*b*) if so, the details thereof?